# <u>4வது சிறுவழக்குகள் நீதிமன்றம், சென்னை- 600 104.</u>

நாள். 11.08.2025
எம்.சி.ஓ.பி எண்.658/2024
ம.சா.1
பெயர். ராமன்
த/பெ.திரு.கருணாராஜன்
வயது.39

**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த மனுவில் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். ம.சா.ஆ 1 முதல் 20 வரை ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.

**<u>2வது எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

விபத்து சமயத்தில் எனக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தை தான் ஓட்டி சென்றேன். விபத்து சமயத்தில் குறுக்கு சாலையிலிருந்து பிரதான சாலை வரும்போது பக்கவாட்டில் வந்த வாகனம் இடித்ததுவிட்டது என்று சொன்னால் சரியல்ல பின்னால் வந்து இடித்தது. வரைப்படத்தில் இரண்டு வாகனங்களும் நேருக்கு நேருக்கு மோதியதாக உள்ளது என்று சென்னனால் சரியல்ல. பின்னால் வந்து தான் மோதியது. நான் தொடர்ந்து வேலை பார்த்து வருகிறேன் பணிநீக்கம் எதுவும் செய்யவில்லை. தற்போதும் நான் வேலைக்கு சென்று கொண்டு இருந்தேன். சம்பளம் பெற்று வருகிறேன் என்றால் சரிதான். எனக்கு எந்த வருமான இழப்பும் இல்லை என்றால் சரியல்ல. 2 நாள் வருமான இழப்பு ஏற்பட்டது. விபத்தினால் உடல் ஊணம் எதுவும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. மூட்டியில் ஜவ்வு கிழிந்துவிட்டது. விபத்துக்கு பிறகு எனக்கு பதவி உயர்வு பெற்று பலுதுக்கம் வேலை எதுவும் செய்யவில்லை. கிளரிகல் வேலை தான் செய்து வருகிறேன். இந்த விபத்தினால் எனக்கு எந்த வருமானமும் ஏற்படவில்லை என்றும் நான் கேட்டிருக்கும் இழப்பீடு மிக அதிகம் என்றால் சரியல்ல. மருத்துவ செலவுகள் நான் நிறுவனத்தின் மூலம் பெறவில்லை. இந்த விபத்து என்னடைய கவனக்குறைவும் அஜாக்கிரதை தான் காரணம் என்பதால் இந்த மனு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.
மறுவிசாரணை இல்லை.

X

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக் கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.

ARUNDHADHI MAGESH

Digitally signed by ARUNDHADHI MAGESH